தினமணி

# குறுவை நெல் விலை வீழ்ச்சி

First Published : 27 Sep 2011 03:14:56 AM IST



கடலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள்.

கடலூர், செப். 26: கடலூர் மாவட்டத்தில் குறுவை நெல் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் குறுவை சாகுபடியும், ஏனைய ஆழ்குழாய்க் கிணற்றுப் பாசனப் பகுதிகளில் சொர்ணவாரி சாகுபடியும் முடிந்து, இப்போது நெல் அறுவடை நடந்து வருகிறது.

குறுவை மற்றும் சொர்ணவாரி சாகுபடி, கடலூர் மாவட்ட விவசாயிகளை காலை வாரிவிட்டது என்கிறார்கள் பெரும்பாலான விவசாயிகள். சொர்ணவாரி, குறுவை பயிரிடப்பட்ட பகுதிகளில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை என்றும், சில விவசாயிகள் கேட்ட பகுதிகளில் மட்டுமே திறக்கப்பட்டு உள்ளன என்றும் வேளாண் அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

கடலூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை சின்னப்பொன்னி, ஐ.ஆர்.50, ஏ.டி.டி. 43 போன்ற ரக நெல் சராசரியாக, மூட்டை (75 கிலோ) ரூ.550-க்குக் தனியார் வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டது. அதாவது கிலோ நெல் ரூ.7.50. ஆனால் அரசு கொள்முதல் விலை சன்ன ரகம் ரூ. 11. ஏனைய ரகங்கள் கிலோ ரூ. 10.

திங்கள்கிழமை கடலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு,நெல் விற்பனை செய்ய வந்த விவசாயி பி.வடுகப்பாளையம் பன்னீர்செல்வம் கூறுகையில், ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு வியாபாரிகளே வருவதில்லை. அவர்கள் சிண்டிகேட் அமைத்துக் கொண்டு, ஓரிரு இடைத் தரகர்களை மட்டுமே அனுப்புகிறார்கள். விலை சரிவுக்கு இதுவும் ஒரு காரணம் என்றார்.

மாநில பா.ஜ.க. விவசாய அணித் தலைவர் காட்டுமன்னார்கோயில் கண்ணன் கூறுகையில், குறுவை சொர்ணவாரி நெல் சாகுபடியில், விவசாயிக்கு கிடைத்த விலை கிலோவுக்கு ரூ. 7 மட்டுமே. நெல் விலை இதுவென்றால், அரிசி கிலோ ரூ.15-க்குத்தான் விற்க வேண்டும். ஆனால் சந்தையில் அரிசி விலை ரூ.30 முதல் ரூ. 35 வரை விற்கப்படுகிறது. கடந்த 10 நாள்களில் மட்டும் அரிசி விலை, கிலோவுக்கு ரூ. 5 உயர்ந்து இருக்கிறது. தமிழக நெல் விவசாயத்தில் வியாபாரிகளும் இடைத் தரகர்களும்தான் லாபம் அடைகிறார்கள். விவசாயிகள் ஆண்டுதோறும் நஷ்டம் அடைகின்றனர். இந்த நிலையைப் போக்க, ஆந்திர மாநில விவசாயிகளைப்போல், ஓராண்டுக்கு நெல் பயிரிடுவதை நிறுத்தி வைக்க வேண்டும் என்றார்.

**"20 சதவீதம் ஈரப்பதமுள்ள நெல் செப். 30 வரை கொள்முதல்'**

First Published : 27 Sep 2011 01:32:24 AM IST

தஞ்சாவூர், செப். 26: வருகிற 30 ஆம் தேதி வரை 20 சதவீதம் ஈரப்பதமுள்ள நெல் கொள்முதல் செய்யப்படும் என்றார் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தஞ்சாவூர் முதுநிலை மண்டல மேலாளர் ஆர். பிச்சை.

இதுகுறித்து திங்கள்கிழமை அவர் தஞ்சாவூரில் அளித்த பேட்டி:

மேட்டூர் அணை நிகழாண்டில் முன் கூட்டியே திறந்ததாலும், ஆழ்குழாய்க் கிணறு பாசனத்தாலும் குறுவை நெல் சாகுபடி முன்னதாகவே தொடங்கப்பட்டு, தற்போது அறுவடைப் பணிகள் நடைபெறுகின்றன.

குறுவைக்கான நெல்லை கொள்முதல் செய்ய 137 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் 62 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. வருகிற 30 ஆம் தேதி வரை 17 முதல் 20 சதவீதம் வரை ஈரப்பதமுள்ள நெல் கொள்முதல் செய்யப்படும்.

1.10.2011 -க்குப் பிறகு 17 சதவீதம் ஈரப்பதமுள்ள நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படும். கூடுதல் ஈரப்பதமுள்ள நெல்லை கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும். அதன்பிறகே, கூடுதல் ஈரப்பதமுள்ள நெல் கொள்முதல் செய்யப்படும்.

1.10.2010 முதல் 25.9.2011 வரை 5.62 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. பொது ரகம் ரூ.1,000 விலையாகவும், ரூ.50 ஊக்கத்தொகையாகவும், சன்னரகம் ரூ.1,030 விலையாகவும், ரூ. 70 ஊக்கத்தொகையாகவும் வழங்கப்படுகிறது.

கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகள் நடக்காமலிருக்க வட்டாட்சியர் தலைமையில் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

முறைகேடுகள் குறித்து புகாரின் தன்மைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் பிச்சை.

**தேர்தல் நடத்தை விதி மீறல்**

தமிழகத்தில் தற்போது உள்ளாட்சித் தேர்தலுக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. இந்த விதிமுறைகள் முடியும் வரை அரசு அலுவலர்கள் அரசின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த தகவல்களை வெளியிடக் கூடாது.

ஆனால், தேர்தல் நடத்தை விதிகளை மீறும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தஞ்சாவூர் மண்டல முதுநிலை மேலாளர் பிச்சை திங்கள்கிழமை செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் போது இந்தச் சந்திப்பு நடக்கிறதே என்று செய்தியாளர்கள் பேசிக் கொண்டிருந்ததை கவனித்த அரசு அலுவலர் ஒருவர், இத்தகவலை மண்டல முதுநிலை மேலாளர் பிச்சையின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

இதையடுத்து, நிலைமையைச் சமாளிக்கும் வகையில், செய்தியாளர்களிடம் கடந்த இரு நாள்களுக்கு முன்பு நெல் கொள்முதல் தொடர்பாக ஆட்சியர் மூலம் விடுக்கப்பட்ட செய்திக் குறிப்புக்காக இந்தச் சந்திப்பு நடத்தப்படுகிறது என்றார் பிச்சை.

**உரத்தட்டுப்பாட்டில் உழலும் சம்பா சாகுபடி**

எம். சங்கர்

First Published : 27 Sep 2011 01:21:26 AM IST



நாகப்பட்டினம், செப். 26: காவிரி டெல்டா மாவட்டங்களின் சம்பா நெல் சாகுபடி தொடக்க நிலையிலேயே உரத் தட்டுப்பாடு மற்றும் உர விலை உயர்வு உள்ளிட்ட பிரச்னைகளில் சிக்கியுள்ளது.

நிகழாண்டில் காவிரி டெல்டா மாவட்டங்களில் இயல்பான பரப்பைவிட சுமார் 15,000 ஹெக்டேர் கூடுதலான பரப்பில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. நாகை மாவட்டத்தில் மட்டும் சுமார் 7,500 ஹெக்டேரில் கூடுதலாக குறுவை சாகுபடி நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

குறுவையின் கூடுதல் பரப்பு, சம்பா சாகுபடியின் இயல்பு பரப்பை குறைக்கும் என்றே கருதப்படுகிறது.

இந்த நிலையில், சம்பா நெல் நடவுப் பணிகள் கடந்த சில நாள்களாக தீவிரமடைந்துள்ளன. காவிரி டெல்டா மாவட்டங்களின் மொத்த சம்பா நெல் சாகுபடி பரப்பில் சுமார் 35 சதத்துக்கும் அதிகமாக நடவுப் பணிகள் நிறைவடைந்துள்ளன என வேளாண் துறை கணக்கெடுப்புகளில் குறிப்பிடப்படுகிறது.

காவிரியின் கடைமடை மாவட்டமான நாகை மாவட்டத்தில் மட்டும் இதுவரை 25 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா நெல் நடவுப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இந்த மாத இறுதிக்குள் சுமார் 50 ஆயிரம் ஹெக்டேரில் நடவுப் பணிகள் நிறைவடையும் எனவும், அக். 20-ம் தேதிக்குள் சுமார் ஒரு லட்சம் ஹெக்டேரில் நடவுப் பணிகள் நிறைவடையும் எனவும் வேளாண் துறை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிலையில், விவசாயிகளின் முக்கிய எதிர்பார்ப்பு தடையில்லாத, தரம் குறையாத உர விநியோகம் என்பதுதான். காரணம், தற்போது கடுமையான உரத் தட்டுப்பாட்டில் சிக்கியுள்ளது காவிரி டெல்டா மாவட்டங்களின் சம்பா நெல் சாகுபடி.

சம்பா நெல் நடவுப் பணியின் போது, டி.ஏ.பி. உரம் அடியுரமாக இடப்படுவது வழக்கம். பயிருக்கு மணிச் சத்தும், தழைச் சத்தும் கிடைக்க வேண்டும் என்பதற்காக, டி.ஏ.பி. உரம் இடப்படும். கடந்த 15 நாள்களாக டி.ஏ.பி. உரம் கிடைக்காததாலும், உரத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதாலும் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

50 கிலோ எடை கொண்ட டி.ஏ.பி. உரம் கடந்த ஆண்டு ரூ. 585-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, சுமார் ரூ. 825 வரை விற்கப்படுகிறது. இந்த விலை மேலும் உயரும் வாய்ப்பும் உள்ளது எனக் கூறப்படுகிறது. உரத்துக்கான மானியத்தை உயர்த்த முன்வராத மத்திய அரசு, உர விலையை உர நிறுவனங்களே நிர்ணயித்துக் கொள்ளலாம் என உத்தரவிட்டதே கடுமையான விலை உயர்வுக்குக் காரணம் என விவசாயிகள் கூறுகின்றனர்.

மேலும், உரத்தில் சத்துகளின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது. டி.ஏ.பி. உரத்தில் ஏற்கெனவே 18:46 என்ற அளவில் இருந்த மணிச்சத்து, தழைச்சத்து சதம் தற்போது 16:44 என்ற அளவில் குறைந்துள்ளது. இதனால், ஏற்கெனவே 100 கிலோ உரம் பயன்படுத்தப்பட்ட இடத்தில், தற்போது 110 கிலோ உரத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது என்கின்றனர் விவசாயிகள்.

உர விலை உயர்வு, சத்துகளின் அளவு குறைவு என்ற நிலையிலும் உரம் கிடைத்தால் போதும் என்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இது தொடர்பாக நாகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் எம். முருகானந்தம் கூறியது:

நாகை மாவட்டத்துக்கான செப்டம்பர் மாத ஒதுக்கீடாக 5,200 டன் டி.ஏ.பி. உரத்துக்கு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. நாகை மற்றும் சுற்றுப் பகுதிகளுக்கான உரம், காரைக்காலில் உள்ள கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த உர மூட்டைகளில், உயர்த்தப்பட்ட விலையை பதிவு

செய்வதற்காக தொடர்புடைய உர நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. மயிலாடுதுறை பகுதிக்குத் தேவையான உரம் விரைவில் வரவுள்ளது.

வரும் 28-ம் தேதி முதல் (புதன்கிழமை) மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் டி.ஏ.பி. உரம் விநியோகிக்கப்படும். இந்த விநியோகம் அக். 10-ம் தேதி வரை நடைபெறும். இதனிடையே, அக்டோபர் மாத ஒதுக்கீட்டை பெற முடியும் என்பதால் உர விநியோகம் சீராகும் என்றார்.

இதுகுறித்து காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கப் பொதுச் செயலாளர் வி. தனபாலன் கூறியது:

உரம் இருக்கிறது என வேளாண் துறை கூறிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. விநியோகத்தை உறுதி செய்யும்போதுதான் அதற்கான பலன் கிடைக்கும்.

கடந்த 15 நாள்களாக நாகை மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் டி.ஏ.பி. உரம் கிடைக்கவில்லை. இதனால், பல பகுதிகளில் அடியுரம் இடாமலேயே சம்பா நடவுப் பணிகள் நடைபெற்றுள்ளன. இதனால், மகசூல் பாதிக்கப்படும். உரத்துக்கான ஆண்டு மானியத்தை உயர்த்த மத்திய அரசு முன்வராததே, உர விநியோகத்தில் ஏற்பட்ட பிரச்னைகளுக்கு காரணம். மத்திய அரசு தன்னுடைய சுமையை விவசாயிகளின் தலையில் இறக்கி வைப்பதை ஏற்க முடியாது என்றார் அவர்.

**விதை உற்பத்தியாளர்களுக்கு விதைச் சான்று பயிற்சிகள்**

First Published : 26 Sep 2011 02:14:59 PM IST

உடுமலை, செப். 25: கோவை, திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு விதைச் சான்று நடைமுறைகள் குறித்த பயிற்சிகள் உடுமலையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற முகாமுக்கு, கோவை விதை ஆய்வு இணை இயக்குனர் ஆ.கோபால் தலைமை வகித்தார். விதைச் சான்று அலுவலர் மா.மகாலிங்கம் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் பேசியது:

விதை உற்பத்தியாளர்கள் அனைவரும் விதைகள் இருப்பு பதிவேட்டை உரிய முறையில் பராமரிக்க வேண்டும். விதைகள் விற்பனை செய்யும்போது குவியல் எண், காலாவதி நாள் ஆகிய விவரங்களை குறிப்பிடுவதுடன், விவசாயிகளின் கையொப்பத்தையும் விற்பனை பட்டியலில் இடம் பெற வேண்டும் என்றார். விதைச் சான்று உதவி இயக்குனர் கோவை ஜி.மோகன்ராஜ் சாமுவேல் பேசும்போது, அதிகபட்ச முளைப்புத் திறன், புறச்சுத்தம், இனத்தூய்மை மிக்க தரமான விதைகளை விதை உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்றார்.

விதை உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளை கண்டறிந்து, விதை உற்பத்தி பணிகள் தடங்கல் இன்றி நடைபெற வேண்டுமென, விதைச் சான்று அலுவலர் (தொழில் நுட்பம்) சுரேஷ்குமார் பேசினார்.

அலுவலர்கள் ஜி.பெருமாள்சாமி, ஆர்.உதயகுமார், அ.இராசாராம், சு.வெங்கடாசலம் ஆகியோர் முகாமில் பேசினர். விதை உற்பத்தியாளர்கள் சார்பில் சக்திவேல், சீனிவாச பாபு ஆகியோர் பேசினர். 40-க்கும் மேற்பட்ட தனியார் விதை உற்பத்தியாளர்கள் முகாமில் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு செயல் விளக்கப் பயிற்சி**

First Published : 26 Sep 2011 11:47:12 AM IST

தேனி, செப். 25: க.மயிலை ஒன்றியத்தில் உள்ள சிறப்பாறை, பொன்னம்மாள்பட்டி ஆகிய கிராமங்களில், காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையம், வட்டார வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை ஆகியவற்றின் சார்பில் மக்காச்சோளம், துவரை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சிக்கு சென்டெக்ட் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ப.மாரிமுத்து தலைமை வகித்துத் துவரையில் நோய் கட்டுப்பாடு, அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்தும், மக்காச்சோளம் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான நவீன தொழில் நுட்பம் குறித்தும் விவசாயிகளுக்கு வயல்வெளி பள்ளி மூலம் செயல் விளக்கம் அளித்தார்.

உழவு முறை, விதைத் தேர்வு, நடவு முறை, களையெடுப்பு, உர மேலாண்மை ஆகியவை குறித்து சென்டெக்ட் மையத் தொழில் நுட்ப வல்லுநர்கள் வீருசிக்கம்மாள், கீதா ஆகியோர் பயிற்சி அளித்தனர். மண் பரிசோதனை, நுண்ணூட்டம் மற்றும் பேரூட்ட சத்து உரமிடுவதன் அவசியம் ஆகியவை குறித்து ஆய்வகத் தொழில் நுட்ப உதவியாளர் சரண்யா பேசினார். க.மயிலை வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு உறுப்பினர் முருகேசன் நன்றி கூறினார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**அதிக விலைக்கு தரமற்ற பால் விற்பனையால் பாதிப்பு ஆவின் விஜிலென்ஸ் அதிகாரிகள் "அதிரடி' ஆய்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2011,00:42 IST

திருநெல்வேலி : நெல்லை பகுதிகளில் அதிக விலைக்கு தரமற்ற பால் விற்பனை செய்து வருவதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டதின் பேரில் ஆவின் விஜிலென்ஸ் அதிகாரிகள் அதிரடி ஆய்வுகளை

மேற்கொண்டு வருகின்றனர்.

நெல்லை மாவட்டத்தில் பல்வேறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், நெல்லை ஜங்ஷன் பாலகம் உட்பட பல பகுதிகளில் கலப்பட தரமில்லாத பால் அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக தொடர்ந்து புகார்கள் தெரிவிக்கப்பட்டு வந்தது. அதிகாரிகள் உதவியுடன் அலுவலர்கள் தொடர்ந்து இவ்வாறு ஈடுபடுவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர்.இந்த முறைகேடுகள் தொடர்பாக பால் வளத் துறை மற்றும் ஆவின் துறை அதிகாரிகளுக்கு தொடர்ந்து புகார்கள் அனுப்பபட்டது. இந்நிலையில் ஆவின் விஜிலென்ஸ் அதிகாரிகள் 5 பேர் கொண்ட குழுவினர் நேற்று காலை நெல்லை மாவட்டத்திற்கு வந்தனர்.

தொடர்ந்து நெல்லை ஜங்ஷன், குலவணிகர்புரம், வண்ணார்பேட்டை, மீனாட்சிபுரம் உட்பட பல்வேறு இடங்களில் பால் மாதிரியை எடுத்து சோதனை செய்ததாக கூறப்படுகிறது.இதில் தரமான பாலில் 4.5 கொழுப்பு சத்தும், 8.5 இதர சத்துக்களும் இருக்க வேண்டும். ஆனால் கலப்பட பாலில் 3.4 கொழுப்பு சத்தும், 6.1 மற்றும் 7.2 இதர சத்துகளும் இருந்தது சோதனையில் தெரிய வந்ததாகவும் கூறப்படுகிறது. இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விசாரணை நடத்தியதில் அதிகாரிகள் சிலரின் அனுமதியின் பேரில் இவ்வாறு செய்து வருவதாக புகார்களை கூறினர்.மேலும், மாவட்டத்தின் பல்வேறு பால் கூட்டுறவு சங்கங்களில் பால் வராமலேயே வந்ததாக கணக்கு காட்டியிருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது. இதில் அதிகாரிகள் சிலருக்கு பங்கு இருப்பதாகவும் ஊழியர்கள் புகார் தெரிவித்தனர். மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் நிலையில் இதில் 70 ஆயிரம் லிட்டர் வரை உற்பத்தி செய்து வருவதாகவும் அரசுக்கு அதிகாரிகள் தவறான தகவல்களை அனுப்பி வருவதாகவும் புகார் கூறப்பட்டது.தனியார் பால் பாக்கெட் விற்பனையில் சுமார் 70 லட்சம் வரை கடனுக்கு அளித்ததாக தெரிவிக்கப்பட்ட தகவலை தொடர்ந்து இதுசம்பந்தமாக விசாரணை நடத்தப்படுகிறது.

நெல்லை ஜங்ஷன் பாலக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் பாலை லிட்டருக்கு 3 ரூபாய் அதிகாரிகள் உதவியுடன் பொதுமக்களிடம் விற்பனை செய்து வருவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.பால் வளத் துறையில் பிற துறைகளை சேர்ந்த அதிகாரிகள் தற்போது பணியாற்றி வருகின்றனர். இவர்களை அந்தந்த துறைகளிலேயே பணியமர்த்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து விசாரணை நடத்த ஆவின் விஜிலென்ஸ் அதிகாரிகள் சிலர் நெல்லையில் முகாமிட்டுள்ளனர். இந்த விசாரணையின் முடிவில் சில அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.இதுகுறித்து ஆவின் விஜிலென்ஸ் அதிகாரிகளிடம் கேட்ட போது, "அனைத்து புகார்கள் தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விசாரணையின் முடிவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என்று தெரிவித்தனர்.

**மைசூருக்கு 3,000 டன் ஆஸ்டர் மலர் ஏற்றுமதி : தசரா பண்டிகையை குறி வைக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2011,23:44 IST

ஓசூர் : தசரா பண்டிகைக்காக மைசூருக்கு 3 ஆயிரம் டன் ஆஸ்டர் மலர்கள் ஓசூர் பகுதியில் ஏற்றுமதியாகிறது. குறைந்த முதலீட்டில் நல்ல லாபம் கிடைப்பதால் ஆஸ்டர் மலர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வமாக ஈடுப்பட்டுள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அதிகளவு ரோஜா மற்றும் அலங்கார மலர் சாகுபடி நடக்கிறது. குறிப்பாக ஓசூர் அருகே பாகலூர், பேரிகை, உத்தனப்பள்ளி, ராயக்கோட்டை, பேளகொண்டப்பள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் அதிகளவு அலங்கார பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது.
இவற்றில் ஆண்டு முழுவதும் 5 ஆயிரம் ஏக்கரில் கண்ணை கவரும் அழகிய ஆஸ்டர்கள் மலர்களை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். இந்த வகை மலர்கள் மஞ்சள், நீலம், சிகப்பு மற்றும் வெள்ளை ஆகிய நான்கு கலர்களில் காணப்படுகிறது.

இங்கு உற்பத்தியாகும் ஆஸ்டர் மலர்கள் பெங்களூரு, ஐதராபாத், மைசூர் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் தினம் ஏற்றுமதியாகிறது. அலங்கார மேடைகள், வரவேற்பு அலங்காரங்கள், பொக்கைகள் மற்றும் மாலைகள் செய்வதற்கு இந்த ஆஸ்டர் மலர்கள் பயன்படுகிறது. ரோஜா மலர்கள் விலை அதிகம் என்பதால், ரோஜாவுக்கு பதில் நான்கு வகை கலர் கொண்ட ஆஸ்டர் மலர்கள் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக வி.ஐ.பி., அலங்கார மேடைகளில் ஆஸ்டர் மலர்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. ஆஸ்டர் மலரை பொறுத்தவரையில் ஓசூர் காலநிலையில் ஆண்டு முழுவதும் உற்பத்தியாகிறது. ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் சாகுபடி செலவாகிறது. சாகுபடி செய்த நான்கு மாதத்தில் மலர்கள் உற்பத்தியாகிறது. மொத்தம் நான்கு முறை ஆஸ்டர் மலர்களை அறுவை செய்யலாம்.

விழா காலங்களில் கிலோ 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரையும், சாதாரண காலத்தில் கிலோ 30 முதல் 40 ரூபாய் வரையும் விற்பனையாவதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. வெளியூர் வியாபாரிகள், விழா காலங்களை குறி வைத்து வழக்கமாக ஓசூர் பகுதியில் விவசாயிகளிடம் ஆஸ்டர் மலர்களை மொத்தமாக குத்தகைக்கு எடுத்து நேரடியாக பறித்து விற்பனை செல்கின்றனர். அதே போல் மைசூர், பெங்களூருவில் அடுத்த மாதம் தசரா பண்டிகை ஏற்பாடுகள் தீவிரமாக நடக்கிறது. அதனால், பண்டிகை நேரத்தில் பூக்கள் விலை உயர வாய்ப்புள்ளதால், மைசூர், பெங்களூரு, ஹைதராபாத் வியாபாரிகள் தற்போது ஓசூர் பகுதியில் முகாமிட்டு ஆஸ்டர் மலர் தோட்டங்களை மொத்தமாக குத்தகைக்கு எடுத்து பூக்களை பறித்து வருகின்றனர்.

இதனால், விவசாயிகளுக்கு மொத்தமாக பணம் கிடைப்பதால், ஆஸ்டர் மலர் உற்பத்தியில் ஓசூர் விவசாயிகள் அதிக ஆர்வமாக ஈடுப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து ஆஸ்டர் மலர் வியாபாரி மஞ்சுநாத் கூறுகையில், ""தசரா பண்டிகையொட்டி ஓசூர் பகுதியில் ஆண்டுதோறும் 3 ஆயிரம் டன் ஆஸ்டர் மலர்கள் ஏற்றுமதியாகும். நடப்பாண்டு அதே போல் அதிகளவில் ஆஸ்டர் மலர்கள் தேவைப்படுகிறது. அதற்காக ஓசூர் பகுதியில் பூக்களை பறித்து மைசூர் கொண்டு செல்ல ஏற்பாடு செய்து வருகிறோம், " என்றார்.

---

தினத் தந்தி

## ஜனவரி–ஜூலை மாத காலத்தில்

## நாட்டின் தேயிலை உற்பத்தி 49 கோடி கிலோவாக உயர்வு

சுதானுகா கோசல்
கொல்கத்தா

நடப்பு தேயிலை பருவத்தில் (ஜனவரி – டிசம்பர்), ஜனவரி முதல் ஜூலை வரையிலான ஏழு மாத காலத்தில், நாட்டின் தேயிலை உற்பத்தி 49.16 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. இது, சென்ற பருவத்தின் இதே காலத்தில் உற்பத்தியான தேயிலையை காட்டிலும் 2.94 கோடி கிலோ அதிகமாகும். சாதகமான பருவநிலை காரணமாக தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், வரும் மாதங்களில் ஏற்றுமதி அதிகரிக்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென் மாநிலங்களில்...

தேயிலை உற்பத்தியில் வட மாநிலங்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளதாகவும், தென் மாநிலங்களின் பங்களிப்பு குறைந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. ஜனவரி – ஜூலை மாத காலத்தில், தென் மாநிலங்களில் தேயிலை உற்பத்தி 14.35 கோடி கிலோவாக உள்ளது. இது, கடந்த ஆண்டை விட 0.4 கோடி கிலோ குறைவாகும். அதேசமயம், வட மாநிலங்களின் தேயிலை உற்பத்தி 3.34 கோடி கிலோ உயர்ந்து 34.81 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. இதனையடுத்து, நாட்டின் ஒட்டுமொத்த

தேயிலை உற்பத்தி 2.94 கோடி கிலோ அதிகரித்துள்ளது.

ஏற்றுமதி

இதே காலத்தில், தேயிலை ஏற்றுமதி 10.73 கோடி கிலோவிலிருந்து 8.98 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இருப்பினும், கென்யா, உகாண்டா போன்ற நாடுகளில் உற்பத்தி குறைந்துள்ளதாலும், இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான், போலந்து மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளில் தேவை அதிகரித்து, அவை இந்திய தேயிலை சந்தையை எதிர்நோக்கி உள்ளதாலும் வரும் மாதங்களில் நம் நாட்டின் தேயிலை ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அதேசமயம், இந்தோனேஷியா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளிலிருந்து தேயிலையை இறக்குமதி செய்து, மதிப்பு கூட்டி மறு ஏற்றுமதி செய்வதிலும் இந் தியா ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில், நடப்பு பருவத்தில், ஜூலை மாதம் வரை இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 94.20 லட்சம் கிலோவாகும். இது, கடந்த ஆண்டு இதே காலத்தில் இறக்குமதி 1.164 கோடி கிலோவைக் காட்டிலும் 22 லட்சம் கிலோ குறைவாகும்.

பயன்பாடு

உள்நாட்டில் தேயிலை பயன்பாடு ஆண்டுக்கு 3.5 சதவீதம் அதிகரித்து வரும் நிலையில், உற்பத்தி போதுமானதாக இல்லை. இதன் காரணமாக தேயிலை விலை மேலும் உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது வட மாநில தேயிலையின் விலை கிலோவுக்கு ரூ.131.35-ஆக உள்ளது. இது கடந்த ஆண்டில் ரூ.121.97-ஆக இருந்தது. இதேபோன்று, தென் மாநிலங்களில் உற்பத்தியாகும் தேயிலை விலை தற்சமயம் ரூ.66.13 என்ற அளவில் உள்ளது. இது, கடந்த ஆண்டில் ரூ.64.17-ஆக இருந்தது. சராசரியாக இந்திய தேயிலையின் தற்போதைய விலை கிலோவுக்கு ரூ.108.12-ஆக உள்ளது. இது, கடந்த ஆண்டில் ரூ.99.50-ஆக இருந்தது.

## நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில்

## வங்கிகள் வழங்கும் வேளாண் கடன் ரூ.5.20 லட்சம் கோடியாக உயரும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், வங்கிகள் வழங்கிய வேளாண் கடன் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. இதனையடுத்து, இந்த நிதி ஆண்டில் வேளாண் கடன் ரூ.5.20 லட்சம் கோடியாக உயரும் என வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு தேசிய வங்கியின் (நபார்டு) தலைவர் பிரகாஷ் பக்ஷி தெரிவித்துள்ளார். இது, நடப்பு நிதி ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை (ரூ.4.75 லட்சம் கோடி) காட்டிலும் 9.5 சதவீதம் அதிகமாகும்.

**இலக்கு**

கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில், வேளாண் கடன் இலக்கு ரூ.3.75 லட்சம் கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஆண்டில், வழங்கப்பட்ட கடன் இலக்கைக் காட்டிலும் 14 சதவீதம் அதிகரித்து ரூ.4,26,531 கோடியாக உயர்ந்து இருந்தது.

இந்திய மக்கள் தொகையில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்களை நம்பி உள்ளனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண் துறையின் உற்பத்தியும் ஓர் உந்துசக்தியாக திகழ்கிறது. எனவே, இந்த உற்பத்தியை அதிகரிப்பதில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

கடந்த 2006–07–ஆம் ஆண்டு கரீஃப் பருவத்திலிருந்து ரூ.3 லட்சம் வரையிலான விவசாய கடனுக்கு 7 சதவீத வட்டியில் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

**வட்டியில் சலுகை**

கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில், குறுகிய கால பயிர் கடனை உரிய காலத்திற்குள் செலுத்தும் விவசாயிகளக்கு வட்டியில் கூடுதலாக 2 சதவீத சலுகை அளிக்கப்பட்டது. ஆக, அந்த நிதி ஆண்டில் இவ்வகை விவசாயிகளுக்க 5 சதவீத வட்டியில் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டில் மேலும் ஒரு சதவீத சலுகை அளிக்கப்பட்டுள்ளது. ஆக, மொத்த சலுகை 3 சதவீதமாக உள்ளது. இதனால், கடனை சரிவர செலுத்தும் விவசாயிகளிடம் 4 சதவீத வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். இதனால், வங்கிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை மத்திய அரசு ஈடுசெய்கிறது.

---

தினகரன்

## மத்திய அரசு நிபுணர் தகவல் வறுமையை அறியாத 60% பேர் சலுகைகளை பெறுகின்றனர்

பதிவு செய்த நாள் : 9/27/2011 0:35:46



புதுடெல்லி : குடும்ப அட்டை மூலம் அரசு சலுகைகள், இலவசங்களை பெறுவோரில் 60 சதவீதத்தினர் ஏழைகள் அல்ல என்று தேசிய ஆலோசனை கவுன்சில் உறுப்பினர் சக்சேனா அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளார். தேசிய ஆலோசனை கவுன்சில் செயல்படுகிறது. அதன் உறுப்பினர்க ளில் ஒருவர் சக்சேனா. மாதத்துக்கு நகரங்களில் ரூ.965 மற்றும் கிராமங்களில் ரூ.781க்கு மேல் செலவிடும் குடும்பங்களை வறுமை கோட்டுக்குகீழ் இல்லாதவர்களாக கருதுவதாக திட்டக் கமிஷன் தெரிவித்தது.

அதாவது, தினசரி வருமானம் நகரங்களில் ரூ.32, கிராமங்களில் ரூ.26க்கு கீழ் இருப்பவர்கள் மட்டுமே ஏழைகள் என்று கூறப்பட்டது. இது வறுமை கோடு பற்றிய பெரிய விவாதத்தை நாடு முழுவதும் கிளப்பியுள்ளது. இதுபற்றி சக்சேனா அளித்த பேட்டியில் கூறியதாவது: 1972&73ம் ஆண்டில் தினசரி ரூ.1.50க்கு கீழ் சம்பாதிப்பவர்களை வறுமை கோட்டுக்கு கீழ் இருப்பவர்களாக அரசு கணக்கிட்டது. அது மாதம் கிட்டத்தட்ட ரூ.32 ஆகிறது. இந்த கணக்கீட்டில் வேறொன் றும் புதிதாக இல்லை. அன்று இருந்த நிலையை இப்போது ஒப்பிடுவது சரியாக இருக்காது.

இலவசங்களை அனுபவிப்பதில் முரண்பாடுகள் நீடிக்கின்றன. ஏழைகள் என்ற பிரிவில் ரேஷன் கார்டு வைத்திருப்போரில் 60 சதவீதத்தினர் உண்மையில் வறுமைகோட்டுக்கு மேல் வசிப்பவர்கள். இவர்கள் ஏழைகளுக்கான அரசின் நலத்திட்டங்கள், சலுகைகளை அனுபவிக்கின் றனர். மாறாக, உண்மையான ஏழைகளில் 20 சதவீதத்தினருக்கு சலுகைகள் கிடைக்காத நிலை இருக்கிறது. அரசுகள் இதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இவ்வாறு சக்சேனா தெரிவித்துள்ளார்.

## முட்டை விலை உயர்வு 261 காசாக நிர்ணயம்

பதிவு செய்த நாள் : 9/27/2011 0:33:51



நாமக்கல்: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பண்ணையாளர், வியாபாரிகள் கலந்து கொண்டனர். மற்ற மண்டலங்களில் விலை உயர்ந்து வருவதால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து முட்டை விலை 4 காசுகள் உயர்த்தப்பட்டு 261 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு கிலோ முட்டைக்கோழி விலை ரூ.37 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி விலை ^52 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது. பிற மண்டலங்களில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விவரம் (பைசாவில்) வருமாறு: சென்னை & 262, பெங்களூரு & 260, மைசூர் & 255, ஹைதராபாத் & 247, மும்பை & 274, விஜயவாடா & 245, கொல்கத்தா & 293, டெல்லி & 270 காசுகள்